In the Court of the Magalir Neethimandram Fast Track Mahila Court, Thoothukudi

S.C.No.8/2020

Deposition of P.W.5

| | |
|---|---|
| Name | திருமதி.கலைசெல்வி |
| Father's Name/Husband's Name | திரு. |
| Village | |
| Taluk | |
| Calling | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Evidence Act Chapter X of 1872 on the 29th day of September 2025.

(எதிரிகள் ஆஜர்)

**முதல் விசாரணை :**

நான் தூத்துக்குடி ஹவுசிங்போர்டில் வசித்து வருகிறேன். ஆஜரில் உள்ள 1, 2 எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எங்கள் வீட்டிற்கு அருகில் ஒரு குழந்தையுடன் குடியிருந்து வந்தனர். சுமார் 5 வருடங்களுக்கு முன்னர் ஒரு நாள் மாலை 6 மணியளவில் நான் தண்ணீர் பிடித்துக்கொண்டிருந்தபோது 2 வது எதிரி என்னிடம் வந்து குழந்தை படியில் இருந்து கீழே விழுந்துவிட்டது என்றும்,. மருத்துவமனைக்கு கூட்டி போக வேண்டும் என்றும், மருத்துவமனைக்கு என்னை வருமாறும் கூப்பிட்டார்கள். 1, 2 எதிரிகள் குழந்தையை எடுத்துக்கொண்டு வந்தார்கள். நானும் உடன் சென்று தூத்துக்குடி அண்ணா நகரில் உள்ள கோமதியம்மாள் மருத்துவமனைக்கு சென்று மருத்துவமனையை காட்டிவிட்டு நான் திரும்பிவிட்டேன். பின்னர் அந்த குழந்தை இறந்துவிட்டது. அந்த குழந்தையை 1, 2 எதிரிகள் தான் அடித்து கொன்றுவிட்டதாக கேள்விப்பட்டு தெரிந்து கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று வழக்கறிஞரால் தெரிவிக்கப்பட்டது.

**<u>மறுவிசாரணை :</u>**இல்லை

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி அளித்த சாட்சியம் அவர் கூறிய அதே வார்த்தைகளால் என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் எதிரி / எதிரிதரப்பு வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி **கையொப்பம்** செய்துள்ளார்.

ஒம்/–எம்.பி.முருகன்,
அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
தூத்துக்குடி.

தட்டச்சு செய்தவர் – சு.கோமதி.